# முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள்: சீதனம், கைக்கூலி மற்றும் மஹர்

## GRIEVANCES AND DISCRIMINATIONS AGAINST WOMEN UNDER THE MMDA: DOWRY, *KAIKULI* AND *MAHR*

Dr. Shamila Dawood
*Senior Lecturer in Law, Department of Commercial Law, Faculty of Law,*
*University of Colombo Sri Lanka*
shamila@law.cmb.ac.lk

**Summary**

*The Muslim Marriage and Divorce Act (MMDA) has faced criticism for its perceived inadequacy in safeguarding the property rights of women. Along this way, the practice of dowry/kaikuli can lead to financial hardships and contravene Islamic principles. Consequently, there is a growing call for amendments to the MMDA that promote gender equality and adhere to Islamic values, aimed at addressing concerns and refining the legal framework governing Muslim marriages and divorces. This study delves into the challenges experienced by Muslim women in Sri Lanka, with a specific focus on their financial and property rights concerning dowry, kaikuli, and mahr during marriages, as well as issues of alimony and maintenance in divorce proceedings, and the joint-owned matrimonial properties. The main objective is to investigate the legal frameworks and societal norms regulating these domains and assess their impact on women's rights within the ambit of the MMDA. Employing a combination of doctrinal analysis and a descriptive-analytical approach, this research endeavours to identify potential avenues for legal and social reform.*

**சுருக்கம்**

முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்து சட்டமானது (Muslim Marriage and Divorce Act -MMDA) பெண்களின் சொத்துரிமையை பாதுகாப்பது தொடர்பில் போதுமான ஏற்பாடுகளை கொண்டிருக்கவில்லை என்ற அடிப்படையிலான விமர்சனத்தை அதிகளவில் எதிர்கொள்கின்றது. பொதுவாக இச்சட்டத்தில் காணப்படுகின்ற சீதனம்/கைகூலி எனும் ஏற்பாடுகளானவை மணமகளின் வீட்டாருக்கு பாரிய நிதி நெருக்கடிகளையும் இன்னும் பல்வேறு வகையான பிரச்சினைகளையும் ஏற்படுத்துமென்பதோடு இது இஸ்லாமிய கொள்கைகளுக்கும் முரணானதாகும். இதன் விளைவாக, இச்சட்டத்தில் பாலின

சமத்துவத்தை ஊக்குவிக்கும், சர்வதேச சட்ட விழுமியங்களை பின்பற்றும் மற்றும் இஸ்லாமிய விழுமியங்களை கடைபிடிக்க கூடியதான திருத்தங்களுக்கான கோரிக்கைகள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன. இக்கோரிக்கைகள் இச்சட்டத்தில் எழுகின்ற சிக்கல்களை அடையாளப்படுத்துவதையும், முஸ்லிம் திருமணங்கள் மற்றும் விவாகரத்துகளை நிர்வகிக்கும் சட்டக் கட்டமைப்பொன்றை செம்மைப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. எனவே இவ்வாய்வானது, இலங்கையில் முஸ்லிம் பெண்கள் அனுபவிக்கும் சவால்கள், குறிப்பாக திருமணங்களின் போதான சீதனம், கைக்கூலி மற்றும் மஹர் தொடர்பான அவர்களின் நிதி மற்றும் சொத்துரிமைகள் தொடர்பிலும் விவாகரத்து நடவடிக்கைகளில் ஜீவனாம்சம்/பிரிமணை மற்றும் பராமரிப்பு பிரச்சினைகள் தொடர்பிலும் திருமணத்தின் நிமித்தம் உருவாகக்கூடிய கூட்டு-ஆதனங்கள் என்பனவற்றிலும் குறிப்பிட்ட கவனத்தினை செலுத்துகிறது. ஆகவே, இக்கட்டுறையானது இவ்வாறான விடயங்களை ஒழுங்குபடுத்தும் சட்ட கட்டமைப்புகள் மற்றும் சமூக நெறிமுறைகளை இலங்கை முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் பரப்பெல்லைக்குள் பெண்களின் உரிமைகள் மீதான அவற்றின் தாக்கத்தை மதிப்பிடுவதனை முக்கிய நோக்காக கொண்டுள்ளது. இவ்ஆய்வானது கோட்பாட்டு பகுப்பாய்வு மற்றும் விவரிப்பு-பகுப்பாய்வு அணுகுமுறைகளைப் பயன்படுத்தி சட்ட மற்றும் சமூக சீர்திருத்தத்திற்கான சாத்தியமான வழிகளை அடையாளம் காண முயற்சிக்கின்றது.

## *1. அறிமுகம்*

இலங்கையானது பல இன, கலாசார மற்றும் மதக் குழுக்களின் செழுமையான பன்முகத்தன்மையைக் கொண்ட நாடொன்றாகும். இப்பல்லின சமூகத்திற்குள் திருமணம், சொத்து மற்றும் விவாகரத்து போன்ற தனிப்பட்ட விவகாரங்களை பல்வேறு சட்டங்கள் ஒழுங்குபடுத்துகின்றன. இதன் அடிப்படையில், தனியார் சட்டங்கள் என அறியப்படும் இந்தச் சட்டங்கள், நாட்டிலுள்ள சில பிரதேசங்களுக்கும் சில குழுக்களுக்குமென சிறப்பாக உருவாக்கப்பட்டுள்ளன. அதாவது கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம் மற்றும் முஸ்லிம் சட்டம் என்றவாறாக வெவ்வேறு வகையில் ஏற்புடையதாகின்றன. முஸ்லிம் சட்டம் இலங்கையிலுள்ள முஸ்லிம் சமூகத்திற்கு பிரத்தியேகமாக ஏற்புடையதாகக் கூடிய முற்றிலும் தனிப்பட்ட சட்டமாக காணப்படுகிறது. இது இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகத்தினுள் குடும்பம் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டு, விரிவான சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. Muslim Marriage and Divorce Act, No.13 of 1951, இலங்கையில் முஸ்லிம் தனிநபர் சட்டத்தின் அடிக்கல்லாக திகழ்கின்றது. இந்த சட்டம் திருமணம், விவாகரத்து தொடர்பான நடைமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகள் தொடர்பிலும் முஸ்லிம் சமூகத்தில் காணப்படக்கூடிய பிற பிரச்சினைகள் தொடர்பிலும் நிர்வகிக்கின்றது. இது இஸ்லாமியக் கொள்கைகள் மற்றும் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதை உறுதிசெய்து,

திருமணங்களை நிச்சயப்படுத்துவதற்கும் கலைப்பதற்கும் ஒருங்கமைக்கப்பட்ட கட்டமைப்பொன்றை வழங்குகிறது.

முஸ்லிம்களிடையே எழக்கூடிய வழியுரிமை மற்றும் நன்கொடைகள் தொடர்பான விடயங்கள் Muslim Intestate Succession Ordinance No 10 of 1931 ஏற்பாடுகளின் அடிப்படையில் ஒழுங்கமைக்கப்படுகின்றன. முஸ்லிமான ஒருவர் செல்லுபடியாகக்கூடிய மரணசாசனமொன்றினை விட்டுச் செல்லாமல் மரணமடைந்தால், சொத்து மற்றும் சொத்துக்களை பகிர்ந்தளிப்பதற்கான விதிகள் மற்றும் நடைமுறைகளை இந்தச் சட்டவாக்கம் கோடிட்டுக் காட்டுகின்றது.[i] இஸ்லாமிய சட்டத்தின்படி வாரிசுகளுக்கிடையே இஸ்லாமியச் சட்ட அடிப்படையில் சொத்து விநியோகத்தை உறுதி செய்வதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது. The Muslim Mosques and Charitable Trusts or Wakfs Act, No. 51 of 1956, சட்டமானது, முஸ்லிம் சமூகத்திற்குள் பள்ளிவாயல்கள் மற்றும் அறக்கட்டளைகளை நிறுவுதல், தொண்டு நிறுவனங்களின் முறையான செயல்பாடு மற்றும் நிர்வாகத்திற்கான வழிகாட்டுதல்களை வழங்குவதோடு, சட்ட மற்றும் மதக் கோட்பாடுகளுக்கு இணங்குவதை உறுதி செய்கிறது.

இலங்கை ஜனநாயகக் குடியரசின் அரசியலமைப்பு தனிப்பட்ட சட்டங்களின் பொருந்தக்கூடிய தன்மை மற்றும் ஒருவரின் மதம் மற்றும் பழக்கவழக்கங்களைப் பின்பற்றுவதற்கான சுதந்திரத்தை உறுதி செய்கிறது. இதுதொடர்பில் உறுப்புரை *16(1)* முக்கியத்துவம் பெறுவதோடு அது பின்வருமாறு ஏற்பாடு செய்கிறது,[ii]

> *''இப்போதுள்ள எழுத்திலான சட்டங்கள், எழுத்திலில்லாச் சட்டங்கள் எல்லாம் இந்த அத்தியாயத்தின் முற்போந்த ஏற்பாடுகளுடன் ஒவ்வாதனவாக இருப்பினும், செல்லுபடியும் தொழிற்பாடும் உடையனவாயிருத்தல் வேண்டும்.''*

மேலும், இலங்கை அரசியலமைப்பானது ஒருவர் தான் விரும்பிய மதம் அல்லது நம்பிக்கையை வைத்திருக்க அல்லது ஏற்றுக்கொள்ளும் சுதந்திரம் உட்பட சிந்தனை, மனசாட்சி மற்றும் மதம் ஆகியவற்றின் சுதந்திரத்தை ஏற்றுக்கொள்கிறது.[iii]

அனைத்து தனிநபர்களின் உரிமைகளையும் அங்கீகரித்து, அவர்களுடைய மத மற்றும் கலாசார விடயங்களுக்கு மதிப்பளித்து அவர்களுடைய நெறிமுறைகளை பிரதிபலிக்கும் சட்ட அமைப்புடன், பன்முக கலாசாரம் மற்றும் மத பன்முகத்தன்மையைக் ஏற்றுக்கொண்டு அங்கீகரிக்கும் தேசமொன்றிற்கு முதன்மை உதாரணமாக இலங்கை தனித்து நிற்கின்றது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. இருப்பினும், தனியார் சட்டங்களின் சில அம்சங்கள் குறிப்பாக திருமண சொத்துக்களை அணுகுதல் மற்றும் நிர்வகித்தல், விவாகரத்து நடைமுறைகளை வழிநடத்துதல் மற்றும் பாலின சமத்துவத்தை அடைதல் போன்ற பெண்களின் உரிமைகளைப் பாதிக்கின்ற விடயங்களும் குறிப்பிடத்தக்களவு இச்சட்டங்களில் காணப்படுவது குறைபாடொன்றாகக் கருதப்படுகின்றது. இலங்கை முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் கீழ்,

சீதனம், கைக்கூலி, மஹர் மற்றும் பிற திருமண சொத்துக்களை உள்ளடக்கிய திருமணமான பெண்களின் சொத்துரிமைகளில் குறிப்பாக கவனம் செலுத்துவதன் மூலம் இந்த சிக்கல்கல்களுக்கு தீர்வுகாண இக்கட்டுரையானது முயற்சிக்கிறது.

## 2. திருமணம் சார்ந்த ஆதனங்கள்

இலங்கையில், முஸ்லிம் திருமணங்கள் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தினால் ஆளப்பட்டாலும் ஷரிஆ சட்டத்தின் கீழ் சட்ட மற்றும் மத தாக்கங்களைக் கொண்ட பல்வேறு நிதி ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது. மஹர் எனப்படுவது, திருமணத்தின் போது மணமகன் மணமகளுக்கு கொடுக்கும் ஒரு தொகை பணம் அல்லது அன்பளிப்பாகும். இது திருமண ஒப்பந்தத்தின் (நிக்காஹ்) இன்றியமையாத விடயமொன்றாக காணப்படுவதோடு இஸ்லாத்தில் மனைவியின் அடிப்படை உரிமையாககவும் கருதப்படுகிறது. மறுபுறம், கைக்கூலி என்பது மணமகன் அல்லது அவரது குடும்பத்தினருக்கு திருமணத்திற்கான பிரதிபலனாக மணமகளின் குடும்பத்தினரால் வழங்கப்படும் சீதனம் அல்லது பரிசுகளைக் குறிக்கிறது. இந்த நடைமுறை, வெளிப்புற காரணிகளால் பாதிக்கப்பட்டு, முஸ்லிம் கலாசாரத்தில் ஊடுருவியுள்ளது. இருப்பினும், இது இஸ்லாமிய ஷரிஆ சட்டத்திற்கு முரணானது. ஏனெனில் இது சம்பந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் தேவையற்ற அழுத்தத்தையும் ஏற்படுத்தலாம். அத்தோடு, இந்த நடைமுறை முஹம்மது நபி (ஸல்) அவர்களின் காலத்தில் அறியப்படவில்லை, எனவே இலங்கையின் முஸ்லிம்கள் செறிந்து வாழும் சில பிரதேசங்களில் வேறூன்றியுள்ள ஒரு சம்பிரதாயமாக இது காணப்படுகின்றது. அதன்படி, கைக்கூலியானது திருமண ஒப்பந்தங்களின் நியாய மற்றும் சமத்துவக் கொள்கைகளை மீறுகிறது. இதற்கு நேர்மாறாக, மஹர் என்பது முஸ்லிம் தம்பதிகளின் வாழ்க்கையில் ஆழமான முக்கியத்துவத்தைக் கொண்ட ஒரு நேசத்துக்குரிய பாரம்பரியத்தை பிரதிபலிக்கிறது. இது திருமணத்தில் பரஸ்பர மரியாதை, புரிந்துணர்வு, கூட்டாண்மை மற்றும் அர்ப்பணிப்பு ஆகியவற்றினை பிரதிபலிக்கின்றது.

முஸ்லிம் திருமணங்களில், விவாகரத்துச் செயல்முறையானது சொத்து விடயங்களில் குறிப்பாக மதாஹ், திருமணத்தின் பின்னரான கூட்டாகச் சொந்தமான சொத்துக்கள், மஹர் மீட்பு மற்றும் கைக்கூலி/சீதனம் போன்றவற்றில் முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்திற்குள் இருக்கும் பொறிமுறைகள் பெரும்பாலும் இதனால் எழக்கூடிய சிக்கல்களை திறம்பட தீர்ப்பதற்கு தவறியுள்ளன. இதனால் திருமணமான பெண்களுக்கு அவர்களின் உரிமைகளை பெற்றுக்கொடுப்பதில் அல்லது வலியுறுத்துவதில் இச்சட்டமானது பல சவால்களை தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது. ஆகவே முஸ்லிம் திருமணங்களுக்குள் சொத்து விடயங்களில் நியாயமான மற்றும் சமத்துவத்தை உறுதி செய்வதற்கான சீர்திருத்தங்களின் அவசியத்தை இது எடுத்துக்காட்டுகிறது.

### 3. திருமண ஒப்பந்த உருவாக்கம்

இஸ்லாத்தில் திருமணமென்பது (நிகாஹ்) ஒரு ஒப்பந்தமாகும். திருமண ஒப்பந்த பேச்சுவார்தைகளில் ஈடுபடுகின்ற போது, செல்லுபடியாகும் மற்ற நிபந்தனைகளுடன், கைக்கூலி மற்றும் மஹர் என்பன அடிக்கடி பேசப்படுகின்ற முக்கிய அம்சங்களாக இலங்கை முஸ்லிம்கள் மத்தியில் விளங்குகின்றது. இப்பேச்சுவார்த்தைகளின் போது மணமகளின் குடும்பத்தினரால் வழங்கப்படுகின்ற சொத்தின் தொகை மற்றும் அதன் பெறுமதி தொடர்பான விரிவான பேச்சுவார்த்தையானது, மனமகனால் வழங்கப்படக்கூடிய கட்டாய கொடுப்பனவான மஹர் தொடர்பான பேச்சுவார்த்தையின் முக்கியத்துவத்தினைக் குறைக்கின்றது. ‘‘மாப்பிள்ளை வீடு’’ என பொதுவாக மணமகன் குடுப்பத்திற்கு வழங்கப்படுகின்ற மதிப்பு அல்லது கௌரவமானது அவர்களால் முன்வைக்கப்படுகீன்ற கட்டளைகளுக்கு இணங்கி பெண்வீட்டார் செயற்படவேண்டும் என்பதனை எதிர்பார்க்கின்ற அதிகார படிநிலை கட்டமைப்பொன்றினை ஆண்கள் மற்றும் அவர்களின் உறவினர்களிடையே ஒரு முக்கிய மனப்பான்மையை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. இந்த அதிகார படிநிலை மனப்பான்மையானது மணமகள் மற்றும் அவரது குடும்பத்தினரின் மஹர் தொடர்பான விவாதங்களில் ஈடுபடும் திறனைக் கட்டுப்படுத்துகின்றது. மேலும், பல பெண்கள் பெரும்பாலும் தங்கள் கணவர்கள் மற்றும் அவர்களின் சம்பாத்தியத்தை நம்பியிருப்பதால், அவர்கள் குறைந்தபட்ச பேரம்பேச்சுடன் மணமகன் வீட்டாரின் நிபந்தனைகளை ஏற்க முன்வரலாம். பொதுவாக நிக்காஹ்வின் போது, பதிவாளரால், மஹர் தொகையானது முறையாக வெளிப்படுத்தப்படும் அதேவேளை பொதுவாக கைக்கூலி அல்லது சீதனமானது பெரும்பான்மையான சந்தர்பங்களில் பதிவு செய்யப்படாமல் இருப்பது பாரிய குறைபாடொன்றாகக் காணப்படுகின்றது. சில சந்தர்ப்பங்களில் இந்தச் சூழலில் ஏதேனும் அசையாச் சொத்துக்கள் வழங்கப்பட்டால், அவை மணமகளின் பெயரில் அவரது பெற்றோரால் பதிவு செய்யப்படலாம் என்பதனால் அதனை கைக்கூலி அல்லது சீதனமென திருமணத்தின் போது வெளிப்படுத்தப்படாமலும் இருக்கலாம். இவ்வாறாக சீதனம் அல்லது கைகூலிக்கு உட்பட்ட திருமணங்கள், திருமணத்தின் பின்னர் மனைவிமார் தங்களது கணவன்மார்களை விட சில நேரங்களில் அதிகார நிலையில் உயர்ந்தவர்களாக அவர்களுடைய செயற்பாடுகள் வெளிப்படுவதனை காணமுடியும். பொதுவாக அவர்கள் ‘‘நாங்கள் உங்களை சும்மா திருமணம் செய்து கொள்ளவில்லை, என் பெற்றோர் உங்களுக்கு தாராளமாகக் கொடுத்திருக்கிறார்கள்’’ போன்ற கருத்துக்களை குறிப்பிடுவதையும் அவை மேலும் தம்பதிகளுக்கிடையில் பிரச்சினைக்கு வழிவகுப்பதனையும் காணலாம். கணிசமான பணம் அல்லது சொத்துக்கள் இல்லாமல் தமது மகள்மார்களை திருமணம் செய்து கொடுத்தால் கணவர்களால் அவர்கள் வெறும் வேலையாட்களாக நடாத்தப்படலாம் என்ற அச்சம் மணமகளின் பெற்றோருக்கு அடிக்கடி எழுவதையும் இங்கு காணமுடிகிறது. மேலும், சில பெண்களும் வரதட்சணையை முறையை ஆதரிக்கின்றனர். ஏனெனில் பெற்றோர்கள் அவர்களுக்கு அன்பளிப்பாக வீடுகள் மற்றும் சொத்துக்கள் வழங்கப்படுவதால் அவர்கள் அதில் அதிகம் பயனடைகின்றனர். திருமணத்தின் போதான சொத்துப்பரிமாற்றங்கள் பலவாறான அதிகார சமத்துவமின்மையை வெளிப்படுத்துவதைக் காணலாம்.

***மஹர் மற்றும் கைக்கூலி (சீதனம்):*** இஸ்லாமிய பாரம்பரியத்தில், திருமணம் எனும் நிகழ்வானது பல்வேறு சட்ட மற்றும் நெறிமுறைக் கொள்கைகளால் நிர்வகிக்கப்படுகிறது, அவற்றில் மஹர் என்பது குறிப்பிடத்தக்க முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. மணமகன் மணமகளுக்கு செலுத்தும் மஹர், திருமண உறவுக்குள் கவனிப்பு, அர்ப்பணிப்பு மற்றும் நிதி பாதுகாப்பைக் குறிக்கின்றது.[iv] ஷரிஆ சட்டத்தின்படி, முஸ்லிம் திருமண ஒப்பந்தங்களில் மஹர் ஒரு அத்தியாவசிய அங்கமாக கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. திருக்குர்ஆன் மஹர் என்ற கடமையை வெளிப்படையாக வலியுறுத்துகிறது, இது கணவர் தனது மனைவியை பராமரிப்பதற்கும், அவரது நிதி ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்குமான வழிமுறையொன்றாக சித்தரிக்கின்றது. குறிப்பாக விவாகரத்து ஏற்பட்டால். "பெண்களுக்கு உரிய வரதட்சணையை (மஹர்) கருணையுடன் கொடுங்கள்"[v] போன்ற குர்ஆனிய வசனங்கள் இந்த கடமையை தாராளமாகவும் நியாயமாகவும் நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டுகின்றன. இந்த கருத்து இஸ்லாமிய போதனைகளில் வலியுறுத்தப்பட்டுள்ள, பாலின சமத்துவம் மற்றும் திருமணத்திற்குள் உள்ள நியாயமான கொள்கைகளை உள்ளடக்குகிறது. இது மணமகளின் குடும்பத்தின் மீது, சீதனம், கைக்கூலி போன்ற சொத்து மற்றும் நிதிச் சுமைகள் தொடர்பான ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்துவதை போலல்லாமல், மஹர் என்பது பரஸ்பர ஒப்புதல் மற்றும் நிதி ஏற்பாட்டை முதன்மையாக கணவர் மீது குறிக்கிறது.

குர்ஆன் மஹருக்கு ஒரு குறிப்பிட்ட தொகையை நிர்ணயிக்கவில்லை என்றாலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையிலிருந்து உதாரணங்களை பெறுவதன் மூலம் இதற்கான வழிமுறையினை பெறக்கூடியதாகவுள்ளது. முகம்மது நபி (ஸல்) அவர்களின் மகள் மற்றும் மனைவிகளின் மஹர் தொகையானது, 400 திர்ஹம் வெள்ளியில் இருந்தமை, முஸ்லிம்களுக்கு ஒரு முன்மாதிரியாக காணப்படுகின்றது. இருப்பினும், திருமண செயல்முறைக்கு இடையூறாக காணப்படலாம் என்பதற்காக மஹர் வழங்குவதில் ஆடம்பரம் அல்லது அதிகபடியான கோரிக்கைகளுக்கு எதிராக இஸ்லாம் எச்சரிக்கிறது. சமகால முஸ்லிம் சமூகங்களில், மஹர் நடைமுறைகள் கணிசமாக வேறுபடுகளை கொண்டு காணப்படுகின்றன. இது கலாசார விதிமுறைகள் மற்றும் பொருளாதார காரணிகளால் பாதிக்கப்படுகின்றது. ஆயினும்கூட, இங்கு நேர்மை மற்றும் நிதி ஸ்திரத்தன்மையின் மேலோட்டமான கொள்கைகள் முதன்மையாக திகழ்கின்றன. இது வாழ்க்கைத் துணைவர்களிடையே பேச்சுவார்த்தை மற்றும் உடன்படிக்கையில் நெகிழ்வுத்தன்மையை எளிதாக்குகிறது. இதன் மூலம் திருமண பந்தத்திற்குள் பரஸ்பர மரியாதை மற்றும் புரிதல்கள் அதிகரிக்கின்றன.

மஹர் தொகையை நிர்ணயிப்பதில் மிதமான மற்றும் எளிமையின் முக்கியத்துவத்தை இஸ்லாமிய அறிஞரான இப்னு தைமியா அவர்கள் வலியுறுத்துகிறார்கள். குறிப்பாக முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மகள் குறைவான தொகையைப் பெற்றதைக் கருத்தில் கொள்ளும்போது, அதிக மஹரைக் கோருவது அறியாமை மற்றும் விவேகமின்மையை பிரதிபலிக்கிறது என அவர் வாதிடுகிறார்.[vi] இது மஹர் கோரிக்கைகளை ஊக்கப்படுத்தும்,

ஆனால் மிகைப்படுத்தலை கடுமையாக எதிர்க்கும் இஸ்லாமியத் தீர்ப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. இதற்கு மாறாக, மணமகள் அல்லது அவரது குடும்பத்தினரிடம் சீதனம் கேட்பதானது (அதாவது கணிசமான பணம், வாகனம், சொத்து, பொருள் அல்லது உடமைகள் போன்றவை) இஸ்லாமிய கொள்கைகளுக்கு எதிரானது. இத்தகைய கோரிக்கைக்கள் இஸ்லாத்துடன் தொடர்பில்லாத கலாசார மரபுகளிலிருந்து உருவாகியவையாகும். மேலும் இவை உண்மையில் பாவமாகவும் கருதப்பட முடியும். இஸ்லாத்தில் திருமணத்தின் சாராம்சம், பொருள்சார் எதிர்பார்ப்புகளோ அல்லது நம்பிக்கையின் மையத்திலிருந்து விலகிய கலாசார விதிமுறைகளோ அல்ல. மாறாக பரஸ்பர மரியாதை, அன்பு மற்றும் இஸ்லாமிய போதனைகளை கடைப்பிடிப்பதில் உள்ளது.

இஸ்லாமியச் சட்டப்படி, மஹர் கொடுக்கப்படாத திருமணமொன்றானது செல்லுபடியாகாது. எனவே, மஹர் என்பது இலங்கையில் விவாக விவாகரத்து சட்டத்தினுள் திருமணத்தின் செல்லுபடி தன்மையினை தீர்மானிப்பதில் குறிப்பிடத்தக்க பங்கினை கொண்டிருக்கின்றது. யாரும் இதில் மாற்றுக் கருத்து கொண்டு முரண்பட முடியாது. இருப்பினும், மஹரை கைக்கூலியுடன் ஒப்பிடும்போது, மஹரின் அளவுகள் ஒப்பீட்டளவில் குறைவாக உள்ளன. இலங்கையின் சில பகுதிகளில் கைக்கூலியானது மஹரைவிட பல மடங்கு அதிகமாகவுள்ளது. இந்த அதிகரிப்பு மணமகனின் படிப்பு, தொழில், அந்தஸ்து ஆகியவற்றுக்கு ஏற்றவாறு அதிகரிக்கின்றன. உதாரணமாக, கணவர் ரூ. *300,000.*.- இனை மஹராகக் கொடுத்தால், இதற்கு ஈடாக கணிசமான அளவு தங்க நகை, நிலம், வீட்டின் ஒரு பகுதி அல்லது வாகனமொன்று என்று அவர் சீதனமாக அல்லது கைக்கூலியாக கோரலாம். எனவே கைக்கூலியானது மஹரை விட அதிகமாக இருந்தால், இஸ்லாம் நிர்ணயித்த அடிப்படை நோக்கம் இங்கு நிறைவேறாமல் போகலாம்.

‘‘கைக்கூலி” எனும் தமிழ்ச் சொல்லானது புதுமணத் தம்பதிகளின் குடும்ப வாழ்வை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு சிறிய உதவி அல்லது மணமகளின் குடும்பத்தினரின் அன்பளிப்பைக் குறிக்கிறது. இருப்பினும், காலப்போக்கில், இந்த நடைமுறையானது ஏனைய சமூகங்களில் கடைபிடிக்கப்படும் முழுமையான சீதன முறையாக மாற்றமடைந்திருக்கின்றது. துரதிஸ்டவசமாக, கைக்கூலி காலக்போக்கில் சுமையான சீதன நடைமுறையொன்றாக மாறிவிட்டது. இது தற்போது இலங்கையின் சில பிரதேச இஸ்லாமிய சமூகத்தில் பாரிய சவாலாக மாறியுள்ளது. சிலர் சீதனத்தை விட கைக்கூலி என்ற சொல்லை அதன் குறைவான முறையான அர்த்தங்களால் பயன்படுத்த விரும்புகிறார்கள், குறிப்பாக இஸ்லாத்தில் முற்றிலும் தடைசெய்யப்பட்ட சீதனத்திலிருந்து வேறுபட்டதாக கைக்கூலியை அவர்கள் கருதுகிறார்கள். எவ்வாறாயினும், எந்த சொற்கள் பயன்படுத்தப்பட்டாலும், திருமணத்தின் போது செய்யப்படும் கோரிக்கைகள் மூலம் பெறப்பட்ட எந்தவொரு சொத்தும், மணமகனின் குடும்பம் அல்லது பெற்றோரிடமிருந்து வந்தாலும், மணமகளின் பெயருக்கு மாற்றப்பட்டாலும், திருமண ஏற்பாடுகளின் சூழலில் சீதனமாக கருதப்படுகிறது.

சீதனம் வழங்கும் செயல் பெரும்பாலும் மணப்பெண்ணின் குடும்பத்தாருக்கு பெரும் நிதி மற்றும் மன அழுத்தங்களை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக அவர்களுக்கு பல பெண் பிள்ளைகள் இருந்தால் சீதன எதிர்பார்ப்புகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய தந்தைகள் மற்றும் சகோதரர்களும் இரவும் பகலும் அயராது உழைப்பதையும் கஷ்டப்படுவதையும் காணலாம். திருமணத்தின் போது சீதனமாக ஒப்புக் கொள்ளப்பட்ட தொகை அல்லது சொத்தை உரிய காலத்தில் வழங்கத் தவறினால், குறிப்பிடத்தக்க உளவியல் சார்ந்த துன்பங்கள் ஏற்படுவதோடு சில சந்தர்ப்பங்களில் குடும்ப வன்முறையிலும் கூட முடிவடையலாம். அத்தோடு அதிகளவான விவாகரத்துகளுக்கான மிகமுக்கியமானதொரு காரணமாகவும் இச்சீதனம் மூலகாரணியாக காணப்படுகின்றது. அத்தோடு தனது சகோதரிகளுக்கு வீடுகளை கட்டிக்கொடுத்து அவர்கள் திருமணம் முடித்த பின்னரே பல சகோதரர்கள் அதிகம் வயதாகிய நிலையில் இறுதியில் திருமணம் முடிக்கக்கூடிய நிலைமைகள் இலங்கையில் சில பிரதேசங்களில் அதிகளவு காணப்படுகின்றது.

ஆகவே இச்சீதன முறைமையானது இஸ்லாமியக் கோட்பாடுகளுடன் உள்ளார்ந்த முரண்பாடுகளை கொண்டிருந்த போதிலும், இலங்கையின் சில பிராந்தியங்களில் உள்ள முஸ்லிம்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றிய நடைமுறையின் காரணமாக, சட்டத்தில் இருந்து கைக்கூலி தொடர்பான விதிகளை நீக்குவது சவாலானதாக இருக்கின்றது. இதன் விளைவாக, திருமணத்துடன் தொடர்புடைய அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை மீட்டெடுப்பதற்கு போதுமான ஆதாரங்கள் இல்லாமல் போகலாம். அங்கீகரிக்கப்பட்ட இஸ்லாமியக் கொடுப்பனவான மஹர் என்பது மார்க்கம் அனுமதித்த விடயம், கைக்கூலியின் பரவலான நடைமுறையால் மறைக்கப்பட்டதால், இந்த முரண்பாடு இஸ்லாத்தின் நோக்கத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. நடைமுறையில், பெண்கள் பெரும்பாலும் குறைந்தளவிலான மஹர் தொகையையே பெறும் அதே நேரத்தில் மணமகனுக்கு குறிப்பிடத்தக்க பணத்தினை அல்லது சொத்தினை வழங்குகிறார்கள். எனவே மஹரினை விட, கைக்கூலியினை மீட்பதற்கு முன்னுரிமை வழங்குவதற்கான சட்ட விதிகள் தேவைப்படுகின்றன. ஆகவே, இந்த சட்ட சிக்கல்கள் பற்றிய நுணுக்கமான புரிதல் சட்டப்படி சீரமைக்கப்பட வேண்டும். இலங்கை முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தின் பிரிவு 25 ஆனது செல்லுபடியாகும் திருமணத்திற்கான தேவைப்பாடுகள் பற்றி குறிப்பிடுகிறது. இப்பிரிவு மஹரினையும் கட்டாயத் தேவைப்பாடொன்றாக குறிப்பிட வேண்டும்.

MMDA **வில் மஹர் மற்றும் கைக்கூலி தொடர்பான விதிகள்:** MMDA வின் *பகுதி 5 மஹர் மற்றும் கைகூலி தொடர்பில் குறிப்பிடுகிறது. MMDA இன் பிரிவுகள் 37-39 மீட்புக்கான நடைமுறைகளை கோடிட்டுக் காட்டுகிறது. பிரிவு 47(1) இன் கீழ், காதி நீதிபதிகள் தொடர்பான விசாரணைகள் மற்றும் தீர்ப்புகள்* தொடர்பான பொதுவான அதிகாரங்கள் உட்பட, மனைவியின் உரிமைக்கோரல்கள், குழந்தை, தாய் அல்லது குழந்தையொருவரின் சார்பாக

பராமரிப்பு உரிமைகோரல்கள் போன்ற விடயங்கள் தொடர்பிலான ஏற்பாடுகளை கொண்டுள்ளது.

MMDA இன் பிரிவு 37, பெண்களின் பிரதிநிதிகளால் மஹர் அல்லது கைக்கூலியை கோர அனுமதிப்பதோடு பிரிவு 37 மற்றும் பிரிவு 38ன் கீழ் தரப்பினரொருவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் உரிமைகோரல்களில் காதி பெற்ற பணத்தை வழங்குவது தொடர்பில் குறிப்பிடுகிறது. பிரிவு 39 மஹரொன்றிற்கான பரிந்துரை மற்றும் அதற்கான காலக்கெடு என்பனவற்றினை குறிப்பிடுகிறது. பிரிவு 47(1) காதியிடம் உள்ள பொது அதிகாரத்தை உள்ளடக்கியது, இது பொதுவாக அத்தகைய மீட்பிற்கான உரிமைக்கோரல்களைக் கையாளுகிறது. மேற்கூறிய விதிகளுக்கு மேலதிகமாக, பொருள்கோடல் பிரிவு கைக்கூலி என்ற சொல்லை மேலும் வரையறுக்கிறது. அதன்படி, பிரிவு 97 குறிப்பிடுவதாவது, வழங்கப்பட்ட ஒரு தொகை பணம், வழங்கப்பட்ட பிற அசையும் சொத்து, அல்லது மணமகளின் உறவினரால் அல்லது வேறு எந்த நபராலும் திருமணத்திற்கு முன் அல்லது திருமணத்தின் போது மணமகளின் பயன்பாட்டிற்காக மணமகனுக்கு வழங்கப்படும் அல்லது கொடுக்கப்படும் என உறுதியளிக்கப்பட்ட ஏதேனும் பணம் அல்லது அசையும் சொத்து என்பதாகும்.

இந்த வரையறை பணம் மற்றும் அசையும் சொத்துக்களை உள்ளடக்கியது. நடைமுறையில், வீடுகள், நிலம் அல்லது கட்டிடங்கள் போன்ற அசையா சொத்துக்கள் பெரும்பாலும் மணமகனுக்கு திருமணத்திற்கு பிரதிபலனாக கொடுக்கப்படுகின்றன, பொதுவாக இவை சீதனமாக கருதப்படலாம், இருப்பினும் அது தொடர்பான ஏற்பாடுகள் சட்டத்தில் காணப்படாமையும் மற்றும் கைக்கூலி என்ற வரையறையில் அவை உட்படாததினாலும் அவற்றை விவகரத்தின் போது மீட்பது சிக்கலாகலாம். எவ்வாறாயினும் இவை இரண்டும் இஸ்லாமிய சட்டத்திற்கு அப்பாற்பட்டவையாகும்.

மேலும், சட்டம் கைக்கூலியை விரிவாக வரையறுக்கிறதாயினும் அது மஹருக்கு குறிப்பிட்ட வரையறையொன்றை வழங்கத் தவறியுள்ளது. அது கைகூலியுடன் ஒப்பிடும்போது குறைவான முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துகின்றது. நீதியரசர் சலீம் மர்சூஃப் குழு அறிக்கையானது, மஹருக்கு விரிவான விளக்கமொன்றை அறிமுகப்படுத்துகிறது.[vii] இந்த வரையறை இதன் நோக்கத்தினை சரிவர விளக்குகிறது. மேலும், சட்டத்தின் 97வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி சீதனம் கொடுப்பது அல்லது எடுப்பது சட்டத்தில் வெளிப்படையாகத் தடைசெய்யப்படுகிறது என்ற கருத்தினை நீதியரசர் சலீம் மர்சூஃப் அவர்களின் குழு அதிகளவில் பரிந்துரைக்கிறது. மேலும், இக்குழு சீதனத்தினை கைக்கூலியின் வரையறையிலிருந்து விலக்க வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டுகிறது.[viii] முஸ்லிம் சமூகங்களுக்குள் நிலவும் குழப்பம் மற்றும் சிக்கல் யாதெனில், சீதனத்தில் இருந்து கைக்கூலி வேறுபட்டதாக கருதப்படுகின்றமையாகும். இதன் விளைவாக, அது இஸ்லாமியக் கொள்கையுடன் முரண்பட்ட போதிலும், சமூகத்தில் கைக்கூலி திருமணத்தின் அங்கமொன்றாக காணப்படுவதனால், கைக்கூலி தொடர்பான

விதிகளை நிறுவ வேண்டியதன் அவசியத்தில் சர்ச்சையொன்றும் உள்ளது. இதனால் குறித்த குழுவானது விரிவான வரையறையொன்றையொன்றை வழங்க முற்படுகிறது. அதாவது, திருமண ஒப்பந்தத்தினுள் நுழைவதற்கு முன்பு அல்லது அந்நேரத்தில் அல்லது அதற்குப் பிறகும் மணமகனிற்கு மணமகளின் பயன்பாட்டிற்காக உறவினர் அல்லது வேறு எந்த நபரினாலும் வழங்கப்படும் அசையும் அசையாச் சொத்துக்களை உள்ளடக்கும் என்பதாக குறிப்பிடுகிறது. கைக்கூலியின் நோக்கத்தையும் விளக்கத்தையும் விரிவுபடுத்துவது மணமகளுக்கு சாதகமாக இருக்கும் என்று இக்குழு வலியுறுத்துகிறது. எவ்வாறாயினும், ‘‘மணமகளின் பயன்பாடு’’ என்ற கருத்து திருமணத்திற்கான முன்நிபந்தனையாக விளக்கப்படலாம், இது இஸ்லாமிய கொள்கைகளுடன் ஒத்துப்போகவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். கைக்கூலி என்று இது குறிப்பிடப்பட்டாலும், அடிப்படையில் இத்தகைய பரிமாற்றங்கள் பொதுவாக சீதனமாக உருவாக்குகின்றன.[ix] எனவே, திருமணத்தை கருத்தில் கொண்டு செய்யப்படும் சொத்துக்களுக்கான மணமகனின் எந்தவொரு கோரிக்கையும் கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளதோடு, அது மஹரின் அடிப்படை தரத்தையே குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்று தற்போதைய இவ்வாய்வானது வாதிடுகிறது. இதன் விளைவாக, MMDA சீர்திருத்தங்களானவை ஷரீஆ சட்டத்தை பின்பற்றுவதற்கு முன்னுரிமை அளித்தால், கைக்கூலிக்கான தடை நியாயப்படுத்தப்படலாம்.

இஸ்லாமியக் கோட்பாடுகள் திருமணமான அல்லது திருமணமாகாத பெண்களுக்கு தங்களது சொந்த பெயரில் சொத்துக்களை வைத்திருக்கும் உரிமையை அங்கீகரிக்கிறது. ஆண்கள்/கணவர்களே முதன்மையான உணவளிப்பவர்களாக இருப்பதற்கும், அவர்களின் மனைவியரின் மீதான முதன்மையான பொறுப்புகளைச் சுமப்பதற்கும் இஸ்லாம் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் அளிக்கிறது. அதேசமயம் பாலின சமத்துவம் MMDA க்குள் பல்வேறு சந்தர்ப்பங்களில் வலியுறுத்தப்படும் அதே நேரம், இஸ்லாம் பெண்களை சொத்து தொடர்பான விடயங்களில், குறிப்பாக மஹர் பெறும் உரிமையின் அடிப்படையில் உயர்வாக மதிக்கிறது. மணமகன் கணிசமான நிதி ஆதாரங்களைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களில், பெறுமதி மிகுந்த சொத்துக்களை மஹராக வழங்குவதற்கான திறனை அவர் கொண்டிருப்பதானது, பெண்களுக்கான நிதிப் பாதுகாப்பின் வடிவமொன்றாக திகழும் என்பது பொதுவாகவே ஒப்புக் கொள்ளப்படுகிறது. எவ்வாறாயினும், நிதிப் பங்களிப்பு செய்யாத கணவர்கள் தங்கள் மனைவிகளின் சொத்துக்களைப் பயன்படுத்தி, பின்னர் அவர்களை விவாகரத்து செய்யும்போது, அவர்கள் மேலும் பாதிக்கப்படக் கூடியவர்களாகவும் ஆதரவற்றவர்களாகவும் ஆவதனால், இது மிகவும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய சமூக அக்கறையை முன்வைக்கினற விடயமமொன்றாகவும் காணப்படுகின்றது.

### *4. திருமணக் கலைப்பும் சொத்து தொடர்பான உரிமைகளும்*

விவாகரத்து என்பதனை இஸ்லாம் மிகவும் கண்டிக்கின்றது. ‘‘அல்லாஹ் விவாகரத்தை விட அருவருப்பான எதையும் சட்டமாக்கவில்லை’’ (நூல் 6,

எண் 2173) என முஹம்மது நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுக் காட்டுவதன் மூலம் விவாகரத்து செய்வதில் அல்லாஹ்விற்குள்ள அதிருப்தியை எமக்கு எடுத்துக்காட்டியுள்ளார்கள். இந்த போதனைகள் திருமணங்களைப் பாதுகாப்பதன் மற்றும் முடிந்தவரை விவாகரத்தைத் தவிர்க்க வேண்டியதன் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டுகின்றன.

விவாகரத்து ஒன்று ஏற்பட்டால், பெண்களுக்கு தங்கள் கணவரிடமிருந்து பல்வேறு வகையான ஆதரவு மற்றும் நிதி ஒதுக்கீடுகளைப் பெற உரிமை உண்டு. முதலாவதாக, திருமண ஒப்பந்தத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட மற்றும் கணவனால் மனைவிக்கு உறுதியளிக்கப்பட்ட முன் தீர்மானிக்கப்பட்ட தொகையான மஹரின் எந்தவொரு செலுத்தப்படாத தொகையையும் கோருவதற்கு பெண்ணுக்கு உரிமையுண்டு. இரண்டாவதாக, சீதனம் அல்லது கைக்கூலியை தன் கணவனுக்குத் திருமணம் செய்வதைக் கருத்தில் கொண்டு கொடுத்திருந்தால், அதைத் திரும்பப் பெற அவளுக்கு உரிமையுண்டு. மூன்றாவதாக, கணவன் தனது மனைவி மற்றும் திருமணத்தின் விளைவாக வரும் குழந்தைகளுக்கு பராமரிப்பு எனப்படும் நிதி உதவியை வழங்குவதற்கு பொதுவாக கடமைப்பட்டிருக்கிறார். இந்த ஆதரவு வாழ்க்கைச் செலவுகள், வீட்டுவசதி, சுகாதாரம், கல்வி மற்றும் பிற அத்தியாவசிய தேவைகளை ஈடுசெய்யும் நோக்காகக் கொண்டது. இறுதியாக, அந்தப் பெண் தன்னைப் பொருளாதார ரீதியாக ஆதரித்துக் கொள்ள முடியாவிட்டால், அவள் ஜீவனாம்சம் (பிரிமணை) பெறுவதற்கு உரிமையுடையவளாக இருக்கலாம், இது மதாஹ் என்றும் அழைக்கப்படுகிறது. கணவருடன் சேர்ந்து வாழும் போது அவள் அல்லது அக்குடும்பம் அனுபவித்த வாழ்க்கைத் தரத்துடன் ஒப்பிடக்கூடிய வாழ்க்கைத் தரத்தை உறுதிப்படுத்த, திருமணம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து கணவனால் ஜீவனாம்சம் வழங்கப்படுகிறது. இந்த ஏற்பாடுகள், திருமணம் முடிவுறுத்தப்படுவதனைத் தொடர்ந்து பெண்கள் பொருளாதார ரீதியாக பின்தங்கிய நிலையில் இருப்பதனை அல்லது அனாதரவாக விடப்படாமல் இருப்பதை உறுதிசெய்வதற்காகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும் எமது MMDA இல் இது தொடர்பான ஏற்பாடு இல்லாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது.

இஸ்லாமிய திருமணங்களின் குறிப்பிடத்தக்க அம்சமாக மஹர் என்பது புரிந்து கொள்ளப்பட்டு இருந்தாலும், பொதுவாக இது அதிக மதிப்புள்ள சொத்துக்களை உள்ளடக்குவதில்லை, மாறாக தங்கம் அல்லது பிற அசையும் சொத்துக்கள் போன்ற கணிசமான மதிப்புள்ள பொருட்களையே உள்ளடக்கியிருப்பதை காணக்கூடியதாயுள்ளது. இதன் விளைவாக, திருமண முறிவின் போது இம் மஹர் பெறுமதியான சொத்துக்களை உள்ளடக்கியதாய் இல்லாத போது, அதனை மீட்பதற்கான முயற்சியானது எப்போதும் தீவிரமாக எடுக்கப்படுவதில்லை. பாரம்பரியமாக, திருமணத்தின் தொடக்கத்தில் மணமகளுக்கு மஹர் வழங்கப்படுகிறது, இது பெரும்பாலும் மணமகன் உடனடியாக வழங்கக்கூடிய பணத் தொகையை (அல்லது பணப்பெறுமதிக்கான நகையை) உள்ளடக்கியது. இதனால் அது ஒப்பீட்டளவில் சாதாரணமான தொகையாக இருக்கும். பல சந்தர்ப்பங்களில், திருமண காலப்பகுதியில் இவை தம்பதிகளால் பயன்படுத்தப்படலாம். இருந்தபோதிலும், மஹர் தொடர்பான

விதிகளையும், விவாகரத்து நடவடிக்கைக்களின் போது செலுத்தப்படாத மஹரைத் பெறுவதற்கான வழியையும் இந்தச் சட்டம் உள்ளடக்க வேண்டும். ஏனெனில் அதற்கு அவளுக்கு உரிமையுண்டு. உதாரணமாக, 1978 இல் *முகமது அகமது கான் எதிர் ஷா பானோ பேகம்*, எனும் ஒரு இந்திய வழக்கில் மனைவி தனது திருமண வீட்டிலிருந்து வெளியேற்றப்பட்டதை தொடர்ந்து, அவள் விவாகரத்துப் பெற்றாள். பின் பராமரிப்பு கோரி, குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 125ன் கீழ் நீதிமன்றத்தை அப் பெண் அணுகினாள். உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பின்படி, மஹர் என்பது கணவனிடமிருந்து மனைவிக்கு மரியாதை அளிக்கும் அடையாளமொன்றாக வழங்கப்படும் ஒன்று என்றும், அது திருமணத்தின் போது அல்லது அது கலைக்கப்படும் போது செலுத்த வேண்டிய தொகையாக இருக்கலாம் என்றும் வலியுறுத்தியது. அத்தகைய சூழ்நிலைகளில் குற்றவியல் நடைமுறைச் சட்டப் பிரிவு 125 இன் கீழ் பெண்களுக்கு பராமரிப்பு உரிமை உண்டு என்பதை நீதிமன்றம் உறுதி செய்தது.[x] இருப்பினும், இஸ்லாமிய சட்டத்தின்படி, மஹர் என்பது மனைவியின் முழுமையான உரிமையாகும். மேலும் அதனை திரும்ப மீளப்பெறுவது தடைசெய்யப்பட்டதாகவும் பாவமாகவும் கருதப்படுகிறது. திருமண உடன்படிக்கையின் புனிதத்தன்மையையும் வாழ்க்கைத் துணைவர்களுக்கிடையிலான நடவடிக்கைக்களில் நேர்மையையும் வலியுறுத்தி, மனைவிக்கு வழங்கப்பட்ட மஹரை திரும்பப் பெறும் கணவர்களை குர்ஆன் கண்டிக்கிறது.[xi]

குறிப்பிடத்தக்க நிதிப் பரிமாற்றங்களின் காரணத்தால் கைக்கூலி மீட்பு தொடர்பான விதிகள் அடிப்படையில் முக்கியத்துவம் வாய்ந்தவை. இருப்பினும், கைக்கூலி தொடர்பான தற்போதைய விதிகள் தொடர்புடைய சட்டம் போதுமானதாக இல்லை என்று கருதப்படுகிறது. மேலும், திருமண பதிவு படிவமானது, கைக்கூலியின் மதிப்பைக் குறிப்பிட இடமொன்றினை உள்ளடக்கி இருந்தாலும், அது பெரும்பாலும் நிரப்பப்படாமல் இருப்பதனைக் காணலாம். இந்த புறக்கணிப்பினால் கைக்கூலி பரிமாற்றங்களின் முறையான பதிவு தொடர்பான சிக்கல்கள் எழுப்பப்படுவதோடு, அதனுடன் தொடர்புடைய அசையும் மற்றும் அசையா சொத்துக்களை மீட்டெடுப்பதில் சவால்களுக்கும் வழிவகுக்கும். இஸ்லாமிய சட்டவியலில் கைக்கூலி தொடர்பான பரிச்சயமான கருத்துக்கள் இல்லை என்றாலும், இலங்கையில் அதன் பயன்பாடானது அதிகம் என்பதனால் அது தொடர்பான சட்ட கட்டமைப்புகளுடன் கூடிய நுட்பமான சட்டத்தின் அவசியத்தை சிறப்பாக சுட்டிக் காட்டுகிறது. கைக்கூலி தொடர்பான வலுவான ஒழுங்குமுறை இல்லாமையினால், அது திருமண முறிவு ஏற்பட்டால், சொத்துக்களை மீட்டிக் கொள்வதில் பல தடைகளை ஏற்படுத்துகிறது என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர். எனவே கைக்கூலி தொடர்பான தடைகளை கருத்தில் கொண்டு, இஸ்லாமிய ஷரீஆ சட்டக் கோட்பாடுகளுக்கு உற்பட்ட முறையில் திருமணத்தின் போது கைக்கூலி மூலம் சொத்துக்களை கை மாற்றுவதை தவிர்ப்பதற்கு ஊக்கப்படுத்துவது கட்டாயமாகும். இதற்கு மாற்றீடாக, மஹர், பராமரிப்பு, மற்றும் மதாஹ் போன்ற கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். இவை திருமணத்தின் போதும், திருமணம் கலைக்கப்பட்ட பிறகும் பெண்களுக்கு ஆதரவளிப்பதற்கான மிகவும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வழிகளை வழங்குகின்றன. மேலும் இந்த வழிகளுக்கு

முன்னுரிமை அளிப்பதன் மூலம் ஷரீஆ சட்டத்தில் பொதிந்துள்ள நீதி மற்றும் சமத்துவக் கொள்கைகளை எதிரொலிக்கக் கூடிய சட்ட சீர்திருத்தங்கள் தொடரப்பட வேண்டும்.

பராமரிப்பு என்பது இஸ்லாத்தின் அடிப்படை அம்சமாகும், இது திருமணத்தை நிர்வகிக்கும் குர்ஆனிய கொள்கையில் வேரூன்றியுள்ளது. ஆணொருவர் தனது மனைவி, குழந்தைகளுக்கு போதுமான அளவு பராமரிப்பு வழங்க முடியாதவராக இருப்பின் அவ்வாறானோர் திருமணம் செய்வதனை இஸ்லாம் விரும்பவில்லை. பராமரிப்பு என்பது உணவு, உடை, தங்குமிடம் மற்றும் கண்ணியமானதொரு மனித இருப்புக்கு தேவையான பிற அத்தியாவசியமான ஏற்பாடுகளை உள்ளடக்கியது. குர்ஆன் வசனங்களின் படி ஆண்கள் பெண்களின் பராமரிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர், ஏனெனில் அவர்களின் குடும்பங்களை பராமரிப்பதற்கான பொறுப்பு அவர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது ஆண்கள் தங்கள் சொத்துக்களில் இருந்து செலவு செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. திருக் குர்ஆன், பெண்கள் மத்தியில் குடும்பக் கட்டமைப்பைப் பராமரிப்பதிலும் இஸ்லாமிய விழுமியங்களைப் பேணுவதிலும், குடும்பங்களின் நலனை பாதுகாப்பதிலும் உள்ள அவர்களின் முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகிறது.[xii]

திருமண முறிவின் போது மணமகளுக்கு வழங்கப்படும் நிதி பங்களிப்புகள் அல்லது சொத்துக்கள், பொதுவாக மதாஹ் என்று அழைக்கப்படுகிறது. இது இஸ்லாமிய திருமண நடைமுறைகளின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். மஹர் மற்றும் மதாஹ் எனும் இவை இரண்டும் இஸ்லாமிய திருமண கட்டமைப்புகளில் இயல்பாகவே முறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இது திருமண ஒப்பந்தத்தின் போதும் மற்றும் திருமண கலைப்பின் போதும் பேணப்பட வேண்டிய கொடுப்பனவு முறைகளாகும். மேற்கூறியவற்றின் பின்னணியில், ஏற்கனவே உள்ள சட்ட விதிகளின் திருத்தம், இஸ்லாமியக் கொள்கைகளுடன் சீரமைக்கப்படுவதை பரிசீலித்து உறுதி செய்ய வேண்டியது அவசியமாகும். முன்பு வழங்கப்பட்ட குழு அறிக்கைகள் மற்றும் முன்மொழியப்பட்ட திருத்தங்களில் வழக்கப்பட்ட அதீத கவனத்துடன், ஷரீஆ சட்டத்தின் நுணுக்கமான ஆய்வொன்றுக்கு இது அவசியப்படுத்துகின்றது. 1974 இன் இந்தோனேசியாவின் சட்ட இல.1 இன் உறுப்புரை 41 (உ) இற்கு இணங்க, நீதிமன்றம் முன்னாள் கணவருக்கு, ஜீவனாம்சம் செலுத்தும்படி அல்லது முன்னாள் மனைவியின் சார்பாக ஒரு குறிப்பிட்ட தொகையை நிர்ணயிக்க வேண்டும் என்ற கடப்பாட்டினை விதிக்க முடியும். இவ்வாறு, சட்டத்தில் ஜீவனாம்சம் ஏற்பாடு காணப்பட்டாலும் ஜீவனாம்சம் செலுத்தும் காலம் அல்லது தொகையை நிர்ணயிப்பதற்கான எந்த அளவுகோலையும் அது குறிப்பிடவில்லை. இதன்காரணமாக இஸ்லாமிய நீதிமன்றங்கள் கணவன்மார்கள் ஜீவனாம்சம் செலுத்துமாறு தேவைப்படுத்தும் வழிகளை திறக்கிறது.[xiii]

முன்மொழியப்பட்ட திருத்தங்கள் மதாஹ்வைத் தீர்மானிப்பதற்கான குறிப்பிட்ட அளவுகோல்களைக் கோடிட்டுக் காட்டுகின்றன. அதன்படி, மதாஹ் தொடர்பான உத்தரவை பிறப்பிக்கும் போது, பல்வேறு தொடர்புடைய காரணிகள் கருத்தில் கொள்ளப்படும். அவைகளானவை [xiv]

1. கணவனின் மாத வருமானம் உட்பட ஜீவனோபாய வழிமுறைகள்.
2. கணவன் மற்றும் மனைவியின் சமூக மற்றும் பொருளாதார நிலை மற்றும் கல்வித் தகைமைகள்.
3. கணவன் மற்றும் மனைவியின் வயது.
4. திருமணத்தின் காலம்.
5. கணவன் அல்லது மனைவியின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பில் உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை.

முன்மொழியப்பட்ட திருத்தம், மதாஹ் என்ற சொல்லை "திறத்தவர்களுக்கிடையில் வெளிப்படையான ஒப்பந்தம் இல்லாத நிலையில், இந்தச் சட்டத்தின் 27வது பிரிவின் கீழ் அல்லது இந்தச் சட்டத்தின் 28(1) இன் கீழ் கணவனின் திருமண தவறு காரணமாக கணவனால் விவாகரத்து செய்யப்பட்ட மனைவியொருவருக்கு செலுத்தப்படக்கூடிய ஆறுதல் தொகையொன்றாக நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் தொகையொன்று என வரையறை செய்கின்றது.[xv]

## 5. விவாகரத்துக்குப் பின்னரான திருமண/இல்லறச் சொத்து - திருமணத்திற்கு முந்தைய மற்றும் திருமணத்திற்குப் பிந்தைய ஒப்பந்தங்கள்

நவீன திருமண ஒப்பந்தங்களில், திருமணத்திற்கு முந்தைய மற்றும் திருமணத்திற்குப் பிந்தைய ஒப்பந்தங்கள் அடிப்படையில் முக்கியமானவை. இந்த ஒப்பந்தங்கள் முறையே திருமணத்திற்கு முன்னும் பின்னும் வாழ்க்கைத் துணைவர்களிடையே செய்யப்படுகின்றன. செர்லின் என்பவரின் கருத்துப்படி, திருமணத்திற்கு முந்தைய ஒப்பந்தம் என்பது தம்பதிகள் தங்கள் திருமண நிகழ்விற்கு முன் செய்துகொண்ட ஒப்பந்தம் என்பதோடு திருமணத்திற்குப் பிறகு அவர்களால் செய்யப்படுவது பிந்தைய ஒப்பந்தம் எனவும் குறித்துக் காட்டுகின்றார்.[xvi] இரண்டு வகையான ஒப்பந்தங்களும் ஒவ்வொரு மனைவியின் நிதி உரிமைகள், சொத்துப் பிரிவு, ஜீவனாம்சம், பரம்பரை உரிமைகள் மற்றும் விவாகரத்து வழக்கில் பின்பற்ற வேண்டிய சட்ட நடைமுறைகள் போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றன.[xvii] அதன்படி, இவ் ஒப்பந்தங்கள் சொத்துப் பிரிவு, நிதி உதவி, வணிக உரிமை, காப்பீடு, வேலை வாய்ப்புகள், திருமண வீடு, பங்குகள் மற்றும் பரம்பரை உரிமைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கலாம். இந்த ஒப்பந்தங்கள் தம்பதிகளுக்கு அவர்களின் சொத்து தொடர்பான எதிர்காலத்தில் தெளிவு மற்றும் கட்டுப்பாட்டை வழங்குகின்றன. மேலும் இது சொத்துதொடர்பான பிரச்சினைகளைத் தவிர்க்கவும், திருமணம் முறிவடைந்தால் விவாகரத்து செயல்முறையை சீரமைக்கவும் உதவும். இருப்பினும், இதற்கிடையில், இஸ்லாத்தின் கட்டமைப்பிற்குள், மஹர் மற்றும் விவாகரத்து வழக்கில் பராமரிப்பு போன்ற குறிப்பிட்ட கட்டாய நிதித் தேவைகள் பெண்களின் பாதுகாப்பை உறுதி செய்வதை வலியுறுத்துகின்றன. மேலும், அவர்களின் பெயர்களின் கீழ் சொத்துக்களை வாரிசு பெறவும் மற்றும் வைத்திருக்கும்

உரிமையையும் இஸ்லாம் வழங்குவதன் மூலம் பெண்களுக்கான சொத்துரிமையை அங்கீகரித்து நிலைநிறுத்துகிறது. திருமணத்திற்கு முந்தைய அல்லது திருமணத்திற்குப் பிந்தையதான உடன்படிக்கைகள், கட்டாய இஸ்லாமிய நிதி ஒதுக்கீடுகள் மற்றும் இரு சாராரின் நலன்களைப் பாதுகாப்பதுடனும் இணங்குவதாய் அனுமதிக்கப்படுவதை உறுதிசெய்யும் மிக நுணுக்கமான ஒப்பந்தவரைவு மிகவும் அவசியம்.

முஸ்லிம் திருமண மற்றும் விவாகரத்து சட்டம் உட்பட சமகால சட்ட கட்டமைப்பில் உள்ள குறிப்பிடத்தக்க இடைவெளிகளின் காரணத்தால் இவ்வகையான உடன்படிக்கைகளை இலங்கையில் அமுல்படுத்துவது சிரமமாகும். ஆயினும்கூட, அவர்களின் திருமணம் கலைக்கப்படும்போது சொத்துப் பிரிப்பின் செயல்முறையை எளிதாக்குவதற்கு இவ்வாறான நடைமுறைகள் அவசியம் பெறுகின்றது. நவீன காலத்தில், பெண்களும் ஆண்களுக்கு இணையாக அதிகளவில் வேலைத்தளங்களில் பங்கு கொள்வதால், பெரும்பாலும் அவர்களது திருமணத்தின் போது கூட்டாக சொத்துக்களை வாங்குகின்றனர்.

சிங்கப்பூர் முஸ்லிம் திருமண விதிகளை உதாரணத்திற்கு எடுத்துக்காட்டினால், இதுபோன்ற சிக்கல்களை நிவர்த்தி செய்வதற்காக, “ஒப்புக் கொண்ட திருமணச் சொத்துத் திட்டம்” போன்ற வழிமுறைகளை பின்பற்றுகின்றமை தெளிவாகின்றது. இது கூடிய கவனத்தை ஈர்த்துள்ளது. இத் திட்டம், குறிப்பாக வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு வாரியத்தின் அடிப்படையில் திருமண சொத்துக்களை பிரிப்பது தொடர்பாக இரு தரப்பினராலும் அங்கீகரிக்கப்பட்ட, அவர்களின் பரஸ்பர ஒப்பந்தத்தை கோடிட்டுக் காட்டுகிறது.[xviii] இந்தோனேசியாவில் திருமணத்தின் போது கொள்வனவு செய்த சொத்துக்கள் கணவன் மற்றும் மனைவியின் கூட்டு சொத்துக்களாக கருதப்படுகின்றன. உதாரணமாக, இந்தோனேசிய திருமணச் சட்டத்தின் கீழ் (பிரிவு *35-36*), திருமண காலத்தில் கிடைத்த செல்வம் எவ்வாறாயினும், திருமணம் மூலம் கூட்டுச் செல்வம் உருவாக்கப்படுகின்றது, இதனால் வாழ்க்கைத் துணைவர்களின் உடன்பாடு இல்லாமல் அத்சொத்தக்கள் மீது எவ்வித நடவடிக்கைகளையும் செயல்படுத்த முடியாது.[xix]

திருமணத்திற்குப் பிந்தைய ஒப்பந்தங்கள் கூட்டாகச் சொந்தமானவையை மட்டுமே உள்ளடக்க வேண்டும் என்பதை முன்னிலைப்படுத்துவது முக்கியமாகும். இது தொடர்பாக அல்கதீப் என்பவர் குறிப்பிடுகையில், பொதுவாக, திருமணத்திற்கு முந்தைய ஒப்பந்தங்கள் சட்ட ஆலோசகர்களால் கண்காணிக்கப்படுவதோடு, வருமானம் மற்றும் சொத்தை முழுமையாகவும் வெளிப்படையாகவும் வெளிப்படுத்துவது அவசியப்படுத்துகிறது. இது விவாகரத்து அல்லது மரணம் ஏற்பட்டால் தம்பதியினருக்கு இடையிலான சொத்த விடயங்கள் அனைத்தையும் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டது. மாறாக, இஸ்லாமிய திருமண ஒப்பந்தங்களில் மஹர் கட்டாய நிபந்தனையொன்றாக இரு சாரார்களுக்கும் இடையே உள்ள மற்ற சட்டப்பூர்வக் கடமைகளுக்கு மேலதிகமாக கருதப்படுகிறது. அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா, சீனா, பின்லாந்து மற்றும் பிரான்ஸ் போன்ற பல நாடுகளில்

திருமணத்திற்கு முந்தைய ஒப்பந்தங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. முன்கூட்டிய ஒப்பந்தங்கள் சொத்து உரிமைகளை வரையறுக்க உதவும் அதே நேரம், அவற்றின் ஏற்றுக்கொள்ளல் மற்றும் அங்கீகாரம் ஆகியவற்றை ஷரீஆ சட்டத்தின்படி இஸ்லாமிய கோட்பாடுகளின் அடிப்படையில் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

## 6. முடிவுரை

MMDA சட்டத்தில் சொத்து உரிமைகள் தொடர்பான கருத்து அதாவது திருமண ஒப்பந்த உருவாக்கம், கலைத்தல் மற்றும் கூட்டாகச் சொந்தமான திருமண சொத்துக்களின் நிர்வாகம் என்பவை மிகவும் சிக்கலானதாகவும் போதிய தெளிவற்றதாகவும் உள்ளது. இந்த கட்டமைப்பின் மையக்கருவாக மஹர் நடைமுறை உள்ளது. இது சட்டப்பூர்வ கடமைகள், நெறிமுறை தரநிலைகள் மற்றும் நடைமுறைக் கருத்தாய்வுகளின் நுணுக்கமான இணைவினை குறித்து நிற்கிறது. இது இஸ்லாமிய ஒன்றியங்களில் உள்ளார்ந்த அர்ப்பணிப்பு, பரஸ்பர ஒப்புதல் மற்றும் நிதிப் பாதுகாப்பு ஆகிய கொள்கைகளுக்கு ஆழமான ஒரு சான்றாக நிற்கின்றது. சமபங்கு, நிதானம் மற்றும் பரஸ்பர மரியாதை ஆகிய மதிப்புகளை உள்ளடக்கி, இஸ்லாமிய திருமண உறவுகளின் சரத்தை மஹரானது வெளிக்காட்டி, சமகால சமூகத்தில் காலங்களை தாண்டிய இஸ்லாமியத்தின் பொருத்தத்தை எதிரொலிக்கிறது. அதன் கட்டாய நடைமுறை, திருமண பந்தத்திற்குள் பெண்களின் நிலையை உயர்த்தும், அவர்களின் நிதிப் பாதுகாப்பை உறுதி செய்யும் இஸ்லாத்தின் உறுதிப்பாட்டை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இருப்பினும், இலட்சியத்திற்கும் யதார்த்தத்திற்கும் இடையிலான துண்டிப்பு பெரும்பாலும் இந்த உன்னத நோக்கத்தின் முக்கியத்துவத்தை குறைக்கின்றன. மஹர் தொகையை நிர்ணயிப்பதில் சுன்னாவை உன்னிப்பாகக் கடைப்பிடித்தாலும், இஸ்லாமியக் கொள்கைக்கு முரணான கைக்கூலி என்று அழைக்கப்படும் சீதனத்தினை சிலர் கோருகின்றமையால், இதில் குழப்பத் தன்மை காணப்படுகின்றது. இந்தப் பொருத்தமின்மை, மஹரின் அடிப்படை நோக்கிலிருந்து குறிப்பிடத்தக்க விலகலை எடுத்துக்காட்டுகிறது. பெண்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் உள்ள அதன் பங்கினை விட்டுக் கொடுக்கின்றது. கைக்கூலியை சீதன முறையாக மாற்றுவது, நிதி நெருக்கடிகள், உளவியல் துயரங்கள் மற்றும் ஆரோக்கியமற்ற திருமண வாழ்கை முறைக்கு இட்டுச்செல்வதோடு பல சவால்கள் உட்பட குடும்ப முரண்பாடுகள் மற்றும் விவாகரத்துகளுக்கும் வழிவகுக்கும்.

இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு, இஸ்லாமிய கொள்கைகளுடன் இணங்கிச் செல்லக்கூடிய ஒப்புக்கொள்ளப்பட்ட திருமணச் சொத்து திட்டங்கள் அல்லது திருமணத்திற்குப் பிந்தைய ஒப்பந்தங்கள் போன்ற சமகால அணுகுமுறைகள் சாத்தியமான தீர்வுகளை வழங்கலாம். ஆயினும்கூட இவை இஸ்லாமிய சட்டவியலிற்குள் இணங்குபவையாகவும் செல்லுபடியாவனவையாகவும் இருக்கின்றதா என்பதை உறுதி செய்ய மேலதிகமான ஆய்வுகளை செய்ய வேண்டுமென்பதைத் வலியுறுத்துகிறன. மேலும், இஸ்லாமிய விழுமியங்கள்

மற்றும் போதனைகளை சிறப்பாகப் பிரதிபலிக்க, திருமணக் கட்டமைப்பிற்குள் சொத்து உரிமைகள் பாதுகாப்படுவதை மற்றும் சமமான முறையில் நடத்தப்படுவதை உறுதி செய்யும் வகையில் முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்துச் சட்டத்தின் குறிப்பிட்ட விதிகளுக்கு இன்றைய காலகட்டத்தில் திருத்தங்கள் இன்றியமையாதவையாகும்.

---

i Section 2 provides that, "It is hereby declared that the law applicable to the intestacy of any deceased Muslim who at the time of his death was domiciled in Sri Lanka or was the owner of any immovable property in Sri Lanka shall be the Muslim law governing the sect to which such deceased Muslim belonged."

ii Ibid Article 16(1).

iii Chapter III of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka, 1978

iv In the Qur'an, the concept of mahr (dower) in Islam is elucidated through four distinct terms: ajr (reward),
ṣadaqa (marriage gift), farīḍa (legal obligation), and niḥla (graciously). Essentially, the mahr represents an
obligatory bridal gift or reward presented by the bridegroom to the bride with kindness, exclusively within
the context of marriage (see Q. 4:4, 24, 25; 5:5, 33:50; 60:11). Although the term "mahr" itself is not
explicitly mentioned in the Qur'an, it is equated with the aforementioned Qur'anic words to underscore its
significance in Islamic matrimonial practices. See, Tirkey, Sunil. A critical analysis of dower (mahr) in
theory and practice in British India through court records from 1800 to 1939. 2020. American University
in Cairo, Master's thesis. AUC Knowledge Fountain. https://fount.aucegypt.edu/etds/1490.

v (Quran 4:4)

[vi] Abu Dawood (2125) and al-Nasaa'i (3375) narrated from Ibn 'Abbaas that 'Ali said: "I married Faatimah
(may Allaah be pleased with her) and said: 'O Messenger of Allah, let me go ahead with the marriage.' He
said: 'Give her something.' I said: 'I do not have anything.' He said: 'Where is your Hutami shield?' I said,
'I have it with me.' He said, 'Give it to her.'" (Classed as saheeh by al-Albaani in Saheeh al-Nasaa'i, 3160.)

[vii] The Justice Saleem Marsoof Committee Report of 2018 serves as a valuable resource containing summaries of previous committees and detailed suggestions for reforms related to the Muslim Marriage and Divorce Act. This comprehensive report meticulously addresses legal and Sharia law perspectives, providing a thorough examination of the proposed reforms based on the insights gathered from previous committees.

[viii] Ibid

[ix] Ibid

[x] Mohd. Ahmed Khan vs Shah Bano Begum And Ors on 23 April, 1985; Arab Ahemadhia Abdulla And Etc. vs Arab Bail Mohmuna Saiyadbhai And Ors. ... on 18 February, 1988

[xi] Surah al-Nisaa' (20-21)

[xii] Men are the maintainers of women because Allah has made some of them to excel others and because they spend out of their property; the good women are therefore obedient, guarding the unseen as Allah has guarded." (4:34)

[xiii] Katz, June S., and Ronald S. Katz. "The New Indonesian Marriage Law: A Mirror of Indonesia's Political, Cultural, and Legal Systems." The American Journal of Comparative Law, vol. 23, no. 4, 1975, pp. 653–81. JSTOR,https://doi.org/10.2307/839240. Accessed 22 Mar. 2024.

[xiv] A copy of the Report is available at, https://www.moj.gov.lk/images/2023/muslim-arriage&Devorce.pdf - Mahr "means a consolatory payment determined by court in the absence of any express agreement between the parties payable to a wife who is divorced by the husband under section 27 of this Act or under 28(1) of this Act upon proof of the matrimonial fault of the husband"

[xv] Ibid.

[xvi] Cherlin, Andrew J. (2009). The Marriage Go-Round: The State of Marriage and the Family in America
Today, New York: Knopf. Cited in Maha Alkhateeb, A Resource Guide for Legal Professionals, Advocates,
Imams & Communities, Islamic Marriage Contracts, 2012

[xvii] Ibid at Alkhateeb.

[xviii] Administrative Muslim Law Act (Chapter 3, Section 145) Muslim Marriage and Divorce Rules [2001 Edi. CAP 3] section 2 which provides, "agreed matrimonial property plan" means a plan, signed by both parties to a marriage, setting out the parties' agreement as to the way in which an HDB matrimonial asset is to be divided;

[xix] Katz, June S., and Ronald S. Katz. n.12 at 679